[1973 நவம்பர் 30

கும்முடிப்பூண்டி—காஞ்சிபுரம் பேருந்து வழித்தடம்

*532 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டிக்கும் காஞ்சிபுரத்திற்கும் இடையே பெரிய பாளையம், வெங்கல், திருவள்ளூர் வழியே ஒரு பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தலைநகராக மாற்றப்பட்ட நேரத்திலேயே அறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலேயே காஞ்சிபுரத்திற்கு ஒவ்வொரு இடத்திலிருந்தும் பேருந்துகள் விடக்கூடிய முயற்சி மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை அளித்தார்கள். இப்பொழுது கும்மிடிப்பூண்டியிலிருந்து வெங்கல் வழியாகச் சென்றால் கிட்டத்தட்ட 80 மைல் தூரம் இருக்கிறது. ஆகவே தனியாக பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி சுண்ணாம்புகுளத்திலிருந்து காஞ்சிபுரத்திற்குப் போகின்ற பேருந்துகள்—மாண்புமிகு உறுப்பினர் கூறிய இடங்களின் வழியாகச் செல்லக்கூடிய பேருந்துகள்—இருப்பதாகவும் அதற்கே போதுமான வருவாய் இல்லை என்பதாகவும் எனக்குக் தகவல் கிடைத்திருக்கிறது.

சென்னை புறநகர் பேருந்து வழித்தடங்களை நீட்டித்தல்

*533 வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து பெரியபாளையம் வரை செல்லும் வழித்தடம் எண் 132 பேருந்துகளை நெல்வாய் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும்?

1973 நவம்பர் 30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) 132-ஆம் எண் வழித்தடத்தை (வள்ளலார் நகர்-பெரியபாளையம்) பெரியபாளையத்திற்கு அப்பால் நெல்வாய் வரை நீட்டிக்கும் செயற் குறிப்பை பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆய்வு செய்தது. பெரியபாளையத்திற்கும் நெல்வாய்க்கும் இடைப்பட்ட சாலை மோட்டார் செல்லத்தக்கதாயினும் பேருந்துப் போக்குவரத்திற்கு ஏற்றதல்ல.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தச் சாலை சீர்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே அதை மறுபரிசிலனை செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சீர்செய்யப்பட்டு இருந்தால் அதை மறுபரிசிலனை செய்யலாம்.

*** 534 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னைக்கும் ஊத்துக்கோட்டைக்கும் இடையிலான வழித் தடம் எண் 92 பேருந்துகளை மதுரைவாயல் கிராமம் வரை சென்று திரும்ப ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இரண்டாயிரம் மக்கட் தொகை கொண்ட அந்தக் கிராமத்திற்கு பஸ் வசதியே இல்லை என்ற நிலைமை இருப்பதால் அதை மறுபரிசிலனை செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பேருந்து வழித்தடங்கள் மக்கள் தொகை அடிப்படையிலே விடப் படுவது அல்ல, சாலை வசதிகளின் அடிப்படையிலேதான் விடப்படு கின்றன. அங்கே சாலை வசதிகள் இல்லை.

*** 535 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும் வெங்கல் கிராமத்திற்கும் இடையிலான வழித் தடம் எண் 58-இ பேருந்தினை ஏனம்பாக்கம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?